**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண்.90/2023

நாள் : 18.06.2024

வா.சா.1. திரு.ராஜேந்திரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து இரண்டிலக்கச் சொத்துக்களாக உள்ளது. மேற்படி இரண்டிலக்க சொத்தும் அடுத்தடுத்து உள்ளது என்றால் சரிதான். நான் எனது பிராதில் மேற்படி இரண்டிலக்கச்சொத்திற்கும் மொத்த சொத்திற்கும் ஒரே நான்குமால்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதலாவது இலக்க சொத்தானது சர்வே எண். 40/1B யில் கண்ட 1.77 ஏக்கர் அளவுள்ள இடத்தில் நடுப்புறம் 18 சென்ட் என்றும், இரண்டாவது இலக்க சொத்தானது மேற்படி சர்வே எண்.40/1B யில் கண்ட 1.77 ஏக்கர் அளவுள்ள நிலத்தின் வடபுறம் 17 சென்ட் நிலம் என்றால் சரிதான். உலகப்ப நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தானது வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு இருப்பதாக இந்த சொத்தின் நான்குமால்கள் காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு 1வது இலக்க சொத்தின் கிழக்கே ராஜேந்திரன், தெற்கே ராஜேந்திரன் என காட்டப்பட்டுள்ளது என்றும், அந்த ராஜேந்திரன் யார் என்றால் தெற்கே காட்டப்பட்டுள்ள ராஜேந்திரன் வேறொரு நபர் ஆவார்.

தென்புற எல்லையாக காட்டப்பட்டுள்ள இராஜேந்திரன் அந்த சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. 2வது இலக்க சொத்திற்கு கிழபுறத்தில் காட்டப்பட்டுள்ள இராஜேந்திரன் என்ற நபர் நான் அல்ல, அவர் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்று எனக்குத் தெரியாது. ராமநாடாரிடமிருந்து உலகப்ப நாடார் ஒரு இலக்கச்சொத்தினை மட்டும் கிரையம் பெற்றார். தாவா சொத்தின் பரப்பளவு 1.77 ஏக்கர் ஆகும்.

நான் தாக்கல் செய்துள்ள வா.சாஆ.1 இல் சொத்தை அடையாளம்

காட்ட பைமார்ஸ் எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் ஒரு இலக்க சொத்தானது வா.சா.ஆ.1ல் எத்தனையாவது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் என்னால் சொல்ல முடியாது. வா.சா.ஆ.1ன் படி இராமநாடார் வாங்கிய சொத்தானது தாவா சொத்து கிடையாது என்றும், தாவா சொத்திற்கு தென்புறத்தில்தான் அந்த சொத்து உள்ளது என்றால் அது தவறு. இராமநாடாருக்கு மொத்தம் 10 பேர் வாரிசுகள் ஆவார்கள்.

நான் கிரையம் வாங்கியது இராமநாடாரின் வாரிசுகளான சுப்ரமணியன் மற்றும் புஸ்பம் ஆகியோரிடமிருந்து வாங்கியிருக்கிறேன். இராமநாடாரின் வாரிசுகளுக்குள் எப்பொழுது பாகம் பிரிக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. அவர்களுக்குள் பாகம் செய்து கொண்டதற்குண்டான எழுத்துமூலமாக ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தப்பட்டடுள்ளதா என்றால் இல்லை. 1.77 ஏக்கர் நிலத்தில் இராமநாடாரின் வாரிசுகளில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. நான் வாங்கிய கிரைய சொத்திற்கு நான்குபுற எல்லைகளாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் இராமநாடாரின் வாரிசுகள் யார்யாருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. சர்வே எண். 40/1B விஸ்தீனம் ஆனது 1 ஏக்கர் 77 சென்ட் ஆகும்.

சர்வே எண். 40/1B சொத்தானது எப்பொழுது உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விவரம் என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–4 மற்றும் 5 மூலம் கிரையம் வாங்கிய சொத்துக்களானது தாவா சொத்திற்கு பாத்தியம் இல்லாத நபர்களிடமிருந்து பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆகிய ஆவணங்களின் அசல் ஆவணங்கள் எங்கு உள்ளது என்றால் அடமானத்தில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள எனது முதல் பிரமாணப்பத்திரிக்கையில் மேற்படி இரு ஆவணங்கள் தொலைந்துவிட்டது என்றால் சரிதான். அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆகியவற்றை

உண்மை தன்மையை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொன்னால் சரியல்ல.

நான் வாங்கிய சொத்துகளுக்கு உட்பிரிவு செய்து கொடுக்கப்பட்ட பட்டாவானது அசல் வழக்கு எண். 31/2010 வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுதுதான் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரத்தில் எத்தனையாவது இலக்கச்சொத்தினை இராமநாடாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. நான் தேவிப்பட்டிணத்தில் இருந்து வருகிறேன். தாவா சொத்தும் தேவிப்பட்டிணத்தில்தான் இருக்கிறது.

வா.சா.ஆ.8 ஆன பாகப்பத்திரம் ஆனது இருக்கும் விவரம் எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் 2023ம் வருடம் தான் தெரியவந்தது. பாகப்பிரிவினை பத்திரம் இருக்கும் விவரம் ஆனது அசல் வழக்கு எண். 31/2010 நிலுவையில் இருக்கும் பொழுதே இருந்த விவரம் எனக்குத் தெரியும் என்றும், அதை மறைத்து நான் தாவாவை நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட பின்னிட்டு இந்த வழக்கை நான் தாக்கல் செய்து நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 31/2010ல் நான் தாக்கல் செய்த வழக்கில் எனக்கு தற்பொழுது கிரையம் செய்த கொடுத்த சுப்ரமணியன் புஸ்பம் ஆகியோர் பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. மேற்படி சுப்ரமணியன் 8வது பிரதிவாதியாகவும், புஸ்பம் 13வது பிரதிவாதியாக உள்ளார்கள் என்றால்ச ரியல்ல. மேற்படி சுப்ரமணியன் மற்றும் புஸ்பம் ஆகியோர் பெயரில் தீர்ப்பு ஏற்பட்டுள்ளதால், அந்த தீர்ப்பு என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

இந்த வழக்கிற்கு மூலம் வேண்டும் என்பதால்தான் 30.04.2023 அன்றுதான் எனக்கு இது பற்றி தெரியும் என்று கூறி நான் தாவா தாக்கல் செய்து நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 31/2010ல் காட்டப்பட்டுள்ள தரப்பினர்களை நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. அசல் வழக்கு எண்.31/2010ல் ஏற்பட்ட

தீர்ப்பை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். அந்த வழக்கில் 29.11.1948 ல் உலகப்பநாடார் இராமநாடாருக்கு கிரையம் கொடுக்கவில்லை என்று காட்டப்படவில்லை என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது.

மேற்படி பிரதிவாதிகள் 29.11.1948 ல் ஏற்பட்ட கிரைய பத்திரத்தை மறைத்து பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.31/2010 ல் தீர்ப்பு பெற்றுள்ளார்கள் என்று நான் சொல்லும் சங்கதியானது தவறானது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு இன்றைய தேதிவரை பட்டாவானது பிரதிவாதிகள் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றாலும், பிரதிவாதிகள்தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் தாவா சொத்தில் நான் வேலிபோட்டு அனுபவித்துவருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

1950 ல் ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரத்தை 80 வருடங்கள் கழித்து செல்லாது என நான் செய்து வரும் கட்சியானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு கலாவது தோசத்தால் பாதிக்கப்பட்டது என்றும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது தரப்பு சான்றாவணமான வா.சா.ஆ.4 மற்றும் 5 மூலமாக கிரையம் பெறும் பொழுதும் அந்த சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க பத்திரத்தை நான் இந்த வழக்கில் ஆவணமான தாக்கல் செய்தால் உண்மை தன்மை தெரிந்துவிடும் என்பதால்தான் அதை தாக்கல் செய்யாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த வில்லங்க சான்றிதழில் 1950 ல் பதியப்பட்ட பத்திரம் ஆனது காட்டப்பட்டது என்றும், அதனால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எவ்வித முன்னெச்சரிக்கையும் செய்யாமல் நான் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்ற நபர் என்று சொல்ல முடியாது என்றால்சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளபடி செய்ய

வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .